போடிநாயக்கனூர் கழக வேட்பாளர் ஓ.பன்னீர்செல்வம், போடி மேற்கு ஒன்றியத்தில் முந்தல், கரட்டுப்பட்டி, தர்மத்துப்பட்டி, சில்லமரத்துப்பட்டி உள்ளிட்ட கிராமங்களில் ஆதரவு திரட்டினார். மக்கள் உற்சாக வரவேற்பளித்தனர். போடி லட்சுமணன், முன்னாள் எம்.பி. ப.ரவீந்திரநாத், கழக நிர்வாகிகள் உள்ளிட்டோர் உடன் சென்றனர்.

தொகுதி மறுவரையறையால் தமிழ்நாட்டுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் ஒன்றிய பா.ஜ.க. அரசைக் கண்டித்து

காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம் முழுவதும் இல்லங்களில் கருப்புக் கொடி ஏற்றுவோம்!

மாவட்டச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. வேண்டுகோள்!

காஞ்சிபுரம், ஏப்.16,

தமிழ் நாட்டில் தொகுதி மறுவரையில் தமிழ் நாட்டை வஞ்சிக்கும் ஒன்றிய பா.ஜ.க.அரசைக் கண்டித்து தத்தம் இல்லங்களில் கருப்புக்கொடி ஏற்றுவோம் என்ற கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தல் படி காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம் முழுவதும், ஒன்றிய பா.ஜ.க. அரசுக்கு எதிராக கருப்புக் கொடிகளால நிரப்புவோம் என்று மாவட்டக் கழகச் செயலாளர்க.சுந்தர் எம்.எல்.ஏ. விடுத்துள்ள அறிக்கையில் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதுகுறித்து க.சுந்தர் எம்.எ ல் . ஏ . வி டு த் து ள் ள அறிக்கை வருமாறு:

2026ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தொகுதிகளை மறுவரையறை செய்ய ஒன்றிய பா.ஜ.க. அரசு திட்டமிட்டு ள்ளது. இதில் மக்களவை இடங்கள் 543லிருந்து சுமார் 800 க்கும் அதிகமாக அதிகரிக்கப்படலாம் என்று எதிர்ப்பார்க்கப்படுகிறது.

இதனால் தமிழ்நாட்டின் தொகுதிகளின் எண்ணிக்கை பாதிக்கப்படும் என எதிர்ப் பார்க்கப்படுகிறது.

இந்த நடவடிக்கை, தமிழ்நாடு, ஆந்திரா, கர்நாடகா, கேரளா, தெலுங்கானா போன்ற தென்மாநிலங்களின் அரசியல் அதிகாரத்தைக் குறைக்கும் செயலாகும் இது

மக்கள் தொகையைக் கட்டுப்படுத்துங்கள், அளவாக குழந்தைகளை பெற்றுக் கொள்ளுங்கள், குடும்பக் கட்டுப்பாட்டை கடைபிடியுங்கள் என்று ஒன்றிய அரசு சொன்னதை எல்லாம் தமிழ்நாடு, இந்தியாவிற்கே வழிகாட்டும் அளவிற்கு செயல்படுத்திக் காட்டியது. சொன்னதை ஒழுங்காக

செய்தற்காக தமிழ்நாட்டிற்கு இன்றைக்கு ஒன்றிய அரசு துரோகம் இழைத்துள்ளது

என்று கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கூறி, ஒன்றிய அரசுக்கு கடும் கண்டனம் தெரிவித்துள்ளார். நாடாளுமன்றத்தில் தென்மாநிலங்கள் பாதிப்படையாது என பிரதமர் அவர்கள் உத்திரவாதம் தரவேண்டும் எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலமுறை கேட்டும் பதில் கிடைக்கவில்லை. திமுக மட்டுமல்ல எந்த மாநிலத்தோடும், எந்த ஆலோசனையும் கேட்காமல் அவர்கள் விருப்பப்படி பா.ஜ.க. அரசின் அப்பட்டமான ஜனநாயக விரோத செயல் இது. இதனால் மாநில உரிமைகளை பாஜக அரசு படுகொலை செய்திருக்கிறது.

நம் கழகத் தலைவர், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பல முறை ஒன்றிய அரசுக்கு இது குறித்து கோரிக்கை விடுத்தும், திமுக மட்டுமல்ல எந்த மாநிலத்தோடும், எந்த ஆலோசனையும் கேட்காமல் அவர்கள் விருப்பப்படி பாஜக அரசின் அப்பட்டமான மாநில உரிமைகளை படுகொலை செய்திருக்கிறார்கள்.

இதனால் கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமிழ் நாட்டின் நலன்காக்க ஒன்றிய அரசுக்கு, இதுவரை பார்க்காத தமிழ்நாட்டை பார்க்க வேண்டியிருக்கும். 50கள், 60களில் பார்த்த பழைய தி.மு.க.வை இந்தியா மீண்டும் பார்க்க வேண்டியிருக்கும் என்று எச்சரிக்கை விடுத்துள்ளார்.

ஒன்றிய பா.ஜ.க. அரசுக்கு மிகக் கடுமையான எச்சரிக்கையை கழகத் தலைவர் - முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ளார். தொகுதி மறுவரையறை என்ற பெயரால் தமிழ்நாட்டின் குரல்வளை நெரிக்கப்படுகிறது. தமிழ் நாட்டின் உரிமைக்குரல் ஒடுக்கப்படுகிறது. தமிழ் நாட்டை புறக்கணிப்பதை சட்டபூர்வமாகவே செய்ய இருக்கிறார்கள். இதற்கு எதிராகத்தான் தனது இறுதி எச்சரிக்கையை முதலமைச்சர் அவர்கள் விடுத்து ள்ளார்கள்.

ஏப்ரல் 16 அன்று நாடாளுமன்ற சிறப்புக் கூட்டத் தொடர் கூடுகிறது. அதில் மக்களவை உறுப்பினர்களின் எண்ணிக்கையை 800 க்கும் மேல் ஆக்கும் அரசியலமைப்புத் திருத்த மசோதாவைக் கொண்டு வரப் போகிறார்கள். நாடாளுமன்றம், சட்டமன்றங்களில் பெண்களுக்கு 33 விழுக்காடு இடஒதுக்கீடு அளிக்க வகை செய்யும் மசோதாவையும் கொண்டு வரப் போகிறார்கள்.

தொகுதி மறுவரையறை என்பது வேறு. இடங்களை அதிகரிப்பது என்பது வேறு. மகளிர் இட ஒதுக்கீடு என்பது வேறு. ஆனால் மூன்றையும் போட்டுக் குழப்பி ஏமாற்றப் பார்க்கிறது பா.ஜ.க. இந்த ஆபத்தைத்தான் முதலமைச்சர் அவர்கள் எச்சரிக்கையாக விடுத்துள்ளார்கள்.

நேற்றைய தினம் முதலமைச்சர் விடுத்த காணொளி காட்சிப் பதிவானது அரசியல் அரங்கில் மிகமிக முக்கியமானதாகப் பார்க்கப்படுகிறது. இந்தியாவே அதனைக் கவனிக்கிறது.

எனவே ஒன்றிய பா.ஜ.க. அரசின் நயவஞ்சகத்தை கண்டிக்கும் வகையில் முதல்வர் அவர்கள் தத்தம் இல்லங்களில் கருப்புக் கொடியை ஏற்றச் சொல்லி இருக்கிறார்.

முதல்வர் அவர்களின் வேண்டுகோள் படி,இதனையே தலைமைக் கழகமும் இன்று (16.4.2026) கழகத் தோழர்கள் பொது மக்கள் அனைவரும் தத்தம் இல்லங்களில் கருப்பு கொடி ஏற்றிட அறிறுத்தியுள்ளது.

எனவே காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம் முழுவதும் உள்ள மாவட்ட, மாநகர, நகர, ஒன்றிய, பேரூர், கிளைக் கழக நிர்வாகிகள், தொகுதி மறுவரையறையில் தமிழ்நாட்டிற்கு துரோகம் இழைக்கும் ஒன்றிய பா.ஜ.க.அரசுக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில், தத்தம் இல்லங்களில் கருப்புக் கொடியை ஏற்றி காஞ்சிபுரம் தெற்கு மாவட்டத்தையே கருப்பு கொடிகளால் நிரப்பி மும் லகையில் நாம் செயல்படுவோம்

மேலும் கழக நிர்வாகிகளும், தோழர்களும் வீடு, வீடாக சென்று கருப்புக் கொடியை வழங்கி, தமிழ் நாட்டிற்கு வரக்கூடிய பேராபத்தை எடுத்துக் கூறியும் விளக்கியும், அனைவர் இல்லங்களிலும் கருப்பு கொடி ஏற்றிட தீவிரமாக பணி செய்தி வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு க.சுந்தர் எம்.எல். ஏ. அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளார்.

சென்னை கிழக்கு மாவட்டம் வில்லிவாக்கம் சட்டமன்றத் தொகுதியில், கழக விளையாட்டு மேம்பாட்டு அணிச் செயலாளரும் கழக நாடாளுமன்ற குழுத் துணைத்தலைவருமான தயாநிதி மாறன் எம்.பி மற்றும் கழக வெற்றி வேட்பாளர் – கழக தகவல் தொழில்நுட்ப அணியின் மாநில துணைச் செயலாளர் கார்த்திக் மோகன் உதயசூரியன் சின்னத்தில் வாக்கு சேகரித்து பிரச்சாரம் மேற்கொண்டார். உடன் வில்லிவாக்கம் சட்டமன்ற உறுப்பினர் அ.வெற்றியழகன், பகுதிக் கழகச் செயலாளர் வே.வாசு, தேர்தல் பொறுப்பாளர்கள் ஓ.ஏ.நாகலிங்கம், வழக்கறிஞர் வி.அருண் மற்றும் கழக முன்னணியினர் உள்ளனர்.

ஆலந்தூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட ஆலந்தூர் தெற்கு பகுதி 164, 166, 167 ஆகிய வட்டங்களில் கழக அமைப்பு செயலாளர் ஆர்.எஸ். பாரதி ஆலந்தூர் தொகுதி தி.மு.க. வெற்றி வேட்பாளர் தா.மோ.அன்பரசனை ஆதரித்து ஜீப் மூலம் வீதி வீதியாகச் சென்று உதயசூரியன் சின்னத்தில் வாக்கு சேகரித்தார். அருகில் மண்டலக் குழுத் தலைவர் என்.சந்திரன், ஆலந்தூர் வடக்கு பகுதி செயலாளர் ப.குணாளன், பொதுக் குழு உறுப்பினர் எம்.எஸ்.கே.இப்ராகிம், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் கோல்டு டி.பிரகாஷ், வட்டச் செயலாளர்கள் கே.ஆர்.ஜெகதீஸ்வரன், வேலவன், சலமான், ஏசுதாஸ், மற்றும் கூட்டணி கட்சி நிர்வாகிகள் உள்ளனர்.

பா.ஜ.க. பெண்களை முன்னிறுத்தி, அவர்களின் பின்னால் நின்று கொண்டு,

தமிழ்நாட்டின் உரிமைகளைப் பறிக்க முயற்சி செய்கிறது!

துறைமுகம் தொகுதி தேர்தல் பிரச்சாரத்தில் - கனிமொழி கருணாநிதி எம்.பி. பேச்சு!

சென்னை.ஏப்.16-

சென்னை துறைமுகம் சட்டமன்றத் தொகுதியில், மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் போட்டியிடும், சென்னை கிழக்கு மாவட்ட திமுக செயலாளரும் வேட்பாளருமான பி.கே. சேகர்பாபுவை ஆதரித்து, சென்னை தம்புசெட்டி தெரு, மண்ணடி சந்திப்பு பகுதியில் திமுக துணைப் பொதுச் செயலாளரும், நாடாளுமன்ற திமுக குழுத் தலைவருமான கனிமொழி கருணாநிதி தேர்தல் பிரச்சாரம் மேற் கொண்டு, பொதுமக்களிடம் உதயசூரியன் சின்னத்திற்கு வாக்குகள் சேகரித்தார்.

இதில் அவர் பேசியது வருமாறு:-

இந்தத் தொகுதியின் நிரந்தரமான வெற்றி வேட்பாளரான, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 'செயல் பாபு' என்று அன்போடு அழைக்கும் நம்முடைய அமைச்சர் சேகர் பாபு அவர்களுக்கு, உங்கள் பொன்னான அன்பான வாக்குகளை உதயசூரியன் சின்னத்தில் அளித்து, அவரை வெற்றி பெறச் செய்ய வேண்டும் என்று உங்களை எல்லாம் நான் வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

நாம் மக்களை சந்தித்து, திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் உதயசூரியன் சின்னத்திற்கும் வாக்களிக்க வேண்டும் என்று கேட்கும் போது, மகிழ்ச்சியுடனும் உரிமையுடனும் இங்கு உள்ள சகோதரிகளையும் சகோதரர்களையும் சந்தித்து வாக்களிக்குமாறு கேட்டுக் கொள்கிறோம். ஏனெனில், எங்களுடைய முதலமைச்சர் அவர்கள் அளித்த அனைத்து வாக்குறுதிகளையும் நிறைவேற்றி தந்திருக்கிறார்.

நம்முடைய வேட்பாளர், இந்தப் பகுதியின் மக்களுடன் தொடர்ந்து பணியாற்றி வருபவர். உங்களில் பலரையும் பெயர் கூறி அழைக்கும் அளவிற்கு நெருக்கமாக இருப்பவர். எந்த பதவி வந்தாலும், உங்களை விட்டு விலகாமல் உங்களோடு இருப்பவர். நீங்கள் எந்த நேரத்தில் அழைத்தாலும் உடனே வந்து உதவி செய்பவர். இரவு நேரமாக இருந்தாலும் அழைப்பை ஏற்று செயல்படும் அமைச்சர் என்றால், அது நம்முடைய சேகர் பாபு அவர்கள் தான். ஆகவே, இந்தத் தொகுதியில் அவரின் வெற்றி உறுதி.

தேர்தல் நேரத்தில் நம்முடைய முதலமைச்சர் அவர்கள், சகோதரிகளுக்கு 1,000 ரூபாய் மகளிர் உரிமைத் தொகை வழங்குவோம் என்று கூறி, அதை நிறைவேற்றியுள்ளார். மேலும், முதலமைச்சரின் முதல் கையெழுத்தாக பெண்களுக்கான 'விடியல் பயணம்' திட்டம் அமல்படுத்

தப்பட்டது. இதனால், ஒவ்வொரு மாதமும் பெண்கள் 800 முதல் 1,000 ரூபாய் வரை சேமித்து வருகின்றனர்.

நம்முடைய மாணவர்கள் பசியுடன் இருக்கக்கூடாது என்பதற்காக காலை உணவுத் திட்டம் கொண்டு வரப்பட்டது. கல்லூரி மாணவர்களுக்கு மாதம் 1000 ரூபாய் வழங்கப்படுகிறது, அது 1500 ரூபாயாக உயர்த்தப்படும். இன்னும் ஒரு மாதத்தில், முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் ஆட்சி அமைந்தவுடன், 1500 ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும். மாணவர்கள் படித்து முடித்தவுடன், வேலை தேடும் இளைஞர்களுக்கு பயிற்சி அளிக்கப்படும் காலத்திலும் மாதம் 1500 ரூபாய் வழங்கப்படும்.

இந்தியாவில் முதன்முதலாக தகவல் தொழில்நுட்பத்திற்கான ஒரு கொள்கையை கொண்டு வந்தவர் தலைவர் கலைஞர். அவரின் வழியில், முதலமைச்சர் அவர்கள் அடுத்த கட்டமாக உள்ள செயற்கை நுண்ணறிவு (AI) போன்ற புதிய தொழில்நுட்பங்களில் மாணவர்கள் முன்னேறுவதற்காக பயிற்சிகள் வழங்க உள்ளார். அடுத்த ஐந்து ஆண்டுகளில், 35 லட்சம் மாணவர்களுக்கு லேப்டாப்புகள் வழங்கப்படும். காலை உணவுத் திட்டம் எட்டாம் வகுப்பு வரை விரிவுபடுத்தப்படும். சுய உதவி குழு பெண்களுக்கு 5 லட்சம் வரை மானியக் கடன் வழங்கப்படும். 8,000 ரூபாய் மதிப்பிலான கூப்பன் வழங்கப்பட்டு, பெண்கள் தங்கள் தேவைக்கேற்ப வீட்டு உபயோகப் பொருட்களை வாங்கிக் கொள்ளலாம்.

இந்தத் தொகுதியில், மதுரவாயில்-துறைமுகம் உயர்மட்டச் சாலை திட்டத்திற்கு 5,770 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. வட சென்னை வளர்ச்சி திட்டத்திற்கு, 1,000 கோடியில் ஆரம்பித்து 6,000 கோடிக்கு மேல் ஒதுக்கப் பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன. யானைக் கவுனி மேம்பாலம் கட்டப்பட்டுள்ளது. 800 கோடி மதிப்பில் பிராட்வே பேருந்து நிலையம் அமைக்கப்படுகிறது.

அடுத்த கட்டமாக, மெட்ரோ ரயில் நிலையங்களுக்கான போக்குவரத்து இணைப்பு வசதிகள் ஏற்படுத்தித்தரப்படும். நவீன மல்டி லெவல் பார்க்கிங் வாகன நிறுத்தங்கள் அமைக்கப்படும். தேவைப்படும் அனைத்து இடங்களிலும் அடுத்த ஐந்து ஆண்டுகளுக்குள் வெள்ளநீர் வடிகால் வசதி ஏற்படுத்தப்படும். முதல்வர் படிப்பகங்கள், வேலைக்குச் செல்லும் பெண்களுக்கான குழந்தைகள் பராமரிப்பு மையங்கள் அமைக்கப்படும்.

திமுக ஆட்சிக்கு வந்தால் பெரும்பான்மை மக்களுக்கு எதிரானவர்கள் என்று கூறப்படுகின்ற நிலையில், நம்முடைய அமைச்சர் அவர்கள் பெரும்பான்மை மக்களுக்கு எந்தளவிற்கு நன்மை செய்துள்ளார் என்பதற்கு இது ஒரு எடுத்துக்காட்டாகும். 4,430 கோயில்களுக்கு குடமுழுக்கு செய்யப்பட்டு, 7,000 ஏக்கருக்கு மேற்பட்ட கோயில் நிலங்கள் மீட்கப்பட்டுள்ளன. பெரும்பான்மை மக்கள் வழிபடும் கோயில்களை பாதுகாத்த ஆட்சி திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி. இதில் முக்கிய பங்கு அமைச்சர் சேகர் பாபு அவர்களுக்கு உள்ளது. அவருக்கு வாக்களித்து, மீண்டும் திமுக ஆட்சியை கொண்டு வர வேண்டும்.

திடீரென, தேர்தல் நேரத்தில் 3 நாட்களுக்கு நாடாளுமன்றத்தை கூட்டியுள்ளனர். பாஜக அரசு, நாடாளுமன்றத்தில் மகளிர் மசோதாவையும் தொகுதி மறுசீரமைப்பையும் கொண்டு வருகிறது. மகளிர் மசோதாவை திராவிட முன்னேற்றக் கழகம் வரவேற்கிறது. தற்போதைய 543 இடங்களில் 33% பெண்களுக்கு ஒதுக்கீடு வழங்க வேண்டும் என்பது திமுகவின் நிலைப்பாடு ஆகும்.

ஆனால், பாஜக பெண்களை முன்னிறுத்தி, அவர்களின் பின்னால் நின்று கொண்டு, தமிழ் நாட்டின் உரிமைகளை பறிக்க முயற்சி செய்கிறது. தமிழ்நாட்டின் எம்.பி.க்க ளின் எண்ணிக்கையை குறைக்க நினைக்கிறார்கள்.

வடமாநிலங்களில் உள்ள தொகுதிகளின் எண்ணிக்கையை அதிகரிக்கவும், பாஜகவிற்கு வாக்களிக்காத தென்மாநிலங்களின் எண்ணிக்கையை குறைக்கவும் அவர்கள் முயற்சி செய்து வருகின்றனர். நம்முடைய முதலமைச்சர் மட்டுமல்லாமல், அண்டை மாநிலங்களின் தலைவர்களும் இந்தக் கருத்தை ஆதரித்து வருகின்றனர். தெலுங்கானா முதலமைச்சர் ரேவந்த் ரெட்டி அவர்கள், கேரள முதலமைச்சர் உள்ளிட்ட பலரும் நம்முடைய முதலமைச்சர் அவர்களின் கருத்துக்களை வரவேற்று, "உங்களோடு நின்று போராடுகிறோம்" என்று தெரிவித்துள்ளனர்.

இங்கே, தமிழ்நாட்டுக்கு துரோகம் செய்து கொண்டிருக்கக்கூடிய எடப்பாடி பழனிசாமி அவர்கள் என்ன சொல்கிறார் என்றால், "இது நல்ல விஷயம் தானே; இதை ஏன் நாம் எதிர்க்க வேண்டும்?" என்று கேட்கிறார். எது நல்ல விஷயம்? டெல்லியில் 39 நாடாளுமன்ற உறுப்பினர்கள் உரிமைகளுக்காக போராடி வருகின்றோம். அந்த எண்ணிக்கை குறைந்துவிட்டால், அனைத்து மசோதாக்களையும் நம்முடைய ஒப்புதல் இல்லாமல் அவர்களால் நிறைவேற்ற முடியும். எதை வேண்டுமானாலும் கொண்டு வர முடியும்.

ஒரு காணொளியை முதலமைச்சர் வெளியிட்டு, தமிழ்நாடு ஒருமித்த குரலில் எழுந்து நின்று போராட வேண்டும் என்று தெரிவித்துள்ளார். தமிழ்நாட்டின் உரிமைகளை பாதுகாக்க முதலமைச்சர் தொடர்ந்து போராடி வருகிறார். தமிழர்கள் ஒன்றுபட்டு எதிர்ப்பை வெளிப்படுத்த வேண்டும். ஒவ்வொரு வீட்டிலும் கருப்புக்கொடி ஏற்றி, இந்த எதிர்ப்பை டெல்லி வரை எட்டச் செய்ய வேண்டும் என்று வேண்டுகோள் வைத்துள்ளார்.

ஒவ்வொரு தமிழனும், ஒவ்வொரு சகோதரியும் தங்கள் வீடுகளில் கருப்புக் கொடி ஏற்றி, நம் முடைய எதிர்ப்பை டெல்லி வரை எட்டும் படி செய்ய வேண்டும் என்று உங்களையெல்லாம் கேட்டுக் கொள்கிறேன். அவர்களுக்கு தமிழ் மண்ணில் ஒரு சரியான பாடத்தை சொல்லித் தர வேண்டும். "தமிழ்நாடு அவர்களை புறக்கணிக்கிறது, தமிழ் நாடு அவர்களை புறக்கணிக்கிறது" என்பதை இந்தத் தேர்தலின் வழியாக தெளிவாக வெளிப்படுத்த வேண்டும். இதுதான் தமிழ் நாடு அவர்களுக்கு சொல்லித் தரக்கூடிய பாடமாக நாம் மாற்ற வேண்டும்.

இவ்வாறு அவர் பேசினார்.

தி.மு.க மகளிரணித் தலைவர் விஜயா தாயன்பன் தயாரிப்பில் உருவான தி.மு.க. கருத்திசைப் பாடலை தி.மு.க. அமைப்பு செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, மேனாள் துணை வேந்தர் முனைவர் ம.இராசேந்திரன், மூத்த எழுத்தாளர் க.திருநாவுக்கரசு ஆகியோர் வெளியிட்டனர். செய்தித் தொடர்புத் தலைவர் டி.கே.எஸ். இளங்கோவன் வாழ்த்துரை வழங்கினார். பாடலை எழுதி இசையமைத்து பாடிய சதீஷ் சக்ரவர்த்தி, இசையமைப்பாளர் தாயன்பன், விஜயா தாயன்பன், கவிஞர் விஜயகிருஷ்ணன் ஆகியோர் உள்ளனர். பாடல் "மனிதம் தொழுவோம் புனிதம் தொழுவோம். அறிவாலய மேலாளர் பத்மநாபன் உடனிருந்தார்.